CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

சீனப் புத்தாண்டுக்கான மேய்ப்புப்பணி செய்தி

கிறிஸ்மஸ் போன்று சீனப் புத்தாண்டும் வெளி அலங்காரத்தாலும் ஆடம்பரத்தாலும் புகழ் அடைந்திருக்கிறது. சிவப்பு நிறம், அங் பாவ் பெக்கட்டு, பட்டாசு முதலியவை சீனப் புத்தாண்டு கொண்டாட்டங்களைச் சுட்டிக்காட்டும் அடையாளங்களாக இருக்கின்றன. ஆனால், இந்த பகட்டான புறச்செயல்கள், கொண்டாட்டத்தின் மையமாக விளங்கும் குடும்ப உறவைப் புதுபிக்கும் செயல்களை மங்க செய்துள்ளன. ஒற்றுமை இராவுணவு, உறவினர் வருகை, பெரியோரை வணங்குதல் போன்ற கொண்டாட்டத்தின் பண்பாட்டுக் கூறுகள், குடும்பம் மற்றும் உற்றார் உறவின் மேன்மையைச் சுட்டிக் காட்டுகின்றன. பொன்னையும் பொருளையும் தேடும் வாழ்க்கை ஓட்டத்தில் இவையெல்லாம் மறந்து போய்விடுகின்றன.

பிரிவாலும் தூரத்தாலும் தளர்வடைந்திருக்கும் உறவை இறுக்கப்படுத்தும் காலமே, சீனப்புத்தாண்டு. இல்லம் திரும்பும் இளவேனிற்காலம்.

திருக்குடும்ப ஆலயத்திற்கும் இது இல்லம் திரும்பும் காலம். நமக்காகவே தயார் செய்யப்பட்டிருக்கும் ஆண்டவரின் திருவிருந்தில் ஒன்றிணைவதற்கான காலமிது. காணாமற்போன மகனையும் மகளையும் விண்ணகத் தந்தையுடன் மீண்டும் இணைக்கும் காலமிது.

கடந்த ஈராண்டுகளாக நாம் அனுபவித்த இந்த தொற்றுநோயும் ஊரடங்கும், நமது நம்பிக்கையையும் ஆலயத்திற்குச் செல்வதற்கான தேவையையும் மாற்றியமைத்து விட்டதாக என பலர் கூறுகின்றனர். ஆலயத்திற்கு வரும் கத்தோலிக்கர்கள், ஆலயத்திற்கு வராதக் கத்தோலிக்கர்கள் என இறைமக்களைக் காட்டுவற்கு, திருப்பலியில் கலந்து கொள்வதை நாம் ஓர் அளவுகோளாக பயன்படுத்தி வந்தோம்.
இந்த தொற்றுநோயால் இயங்கலையில் திருப்பலி காண்பதற்கும், இயங்கலையிலேயே ஆலயக் கூட்டங்களை நடத்துவதற்கும் நாம் தள்ளப்பட்டிருப்பதால், புதியதொரு பிரிவினர் திருஅவையில் தோன்றியுள்ளனர் - இயங்கலை கத்தோலிக்கர்கள். இயங்கலையில் நேரடியாக ஒளிப்பரப்பபடும் திருப்பலியைக் காணமல் இருப்பது புது வகை பாவமாகி இருக்கிறது. அதனால், ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் கலந்து கொள்வதற்குப் பதில் இயங்கலையில் திருப்பலியைக் காண்பது வசதியாகவும் போதுமானதாகவும் இருக்கிறது.

ஆம், தொற்றுநோய்க்கு எதிரான போராட்டம் இன்னும் முற்றுப்பெறவில்லை. ஓமிக்ரோனை அடுத்து எவ்வகையான புதிய வைரஸ் வந்து நம்மை அச்சுறுத்தப் போகிறது என்பது ஆண்டவருக்கே வெளிச்சம். ஆயினும் தொற்றுநோயால் ஏற்பட்ட ஊரடங்கு மீண்டும் வராது எனலாம். இனி புதுபிக்கும் காலம், புதிய ஆன்மீக அருளில் நமது வாழ்வுக்குப் புத்துயிரூட்டும் காலம். இல்லத்திற்குத் திரும்பும் காலம்.
எனவே, இந்த சீனப் புத்தாண்டின் முதல் நாளில், உங்கள் அருள்பணியாளர்களாகிய நாங்கள், பங்கு மக்கள் அனைவருக்கும் அன்போடு விடுக்கும் வேண்டுகோள்...இல்லத்திற்குத் திரும்பி வாருங்கள்!
ஒருசில மருத்துவச் சூழ்நிலை, தடுப்பூசி போடாமல் இருப்பது முதலிய காரணங்களால், நேரடியாக வந்து திருப்பலியில் கலந்து கொள்ள முடியாமல் இருக்கலாம். நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களும் இருக்கலாம். எம்மாதிரியான சூழ்நிலையானாலும், அனைவரும் நமது குடும்பத்தின் ஒரு பகுதி, யாரும் தனித்து விடப்படவில்லை. யாரும் கைவிடப்படவுமில்லை. பரிவுமிக்க தந்தையாகிய கடவுள், இறைமக்களாகிய நீங்கள் எதிர்நோக்கும் வாழ்வின் பரிதாபத்திற்குரிய துக்கச் சூழ்நிலையை அறிவார்.

11 Jalan Gereja, 43000 Kajang, Selangor Darul Ehsan, Malaysia • +603 87331154 • HolyFamily@archkl.org

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

உங்கள் கண்ணீர் வீணாகாது. இதற்கு கடவுள் வழங்கும் உறுதிமொழி: "...என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்...அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்...அவர்களின் துயரங்களை நான் அறிவேன்" (விடுதலைப் பயணம் 3:7).

இரட்டை தடுப்பூசி அல்லது ஊக்கத் தடுப்பூசி பெற்று, ஆலயம் திரும்பியுள்ளவர்கள் அல்லது இயல்பான வாழ்க்கைக்கு திரும்ப தொடங்குபவர்கள் அனைவருக்கும் திருக்குடும்ப ஆலயமும் சிற்றாலயங்களும் திறந்தே இருக்கின்றன என்பதை மறந்து விடவேண்டாம். எபிரேயர் திருமுகத்தின் வார்த்தையை நினைவில் கொள்வோம்:

"சிலர் வழக்கமாகவே நம் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை. நாம் அவ்வாறு செய்யலாகாது; ஒன்றுகூடி ஒருவருக்கொருவர் ஊக்கமூட்டுவோமாக." (எபி.10:25).

இந்த புலி ஆண்டு, உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஆசீர் வழங்குவதாக; அமைதி, ஆரோக்கியம், மகிழ்ச்சி உங்கள் உள்ளத்திலும் இல்லத்திலும் நிறைவாய் தங்குவதாக!

உங்கள் அன்பு மேய்ப்பர்கள்,
அருட்திரு மைக்கல் ச்சுவா, அருட்திரு பிலிப் ச்சுவா, அருட்திரு பொனவேஞ்சர் இராயப்பன், சகோ. ஜோனத்தன் ராவ்.
சீனப்புத்தாண்டு முதல் நாள் 01.02.22

11 Jalan Gereja, 43000 Kajang, Selangor Darul Ehsan, Malaysia • +603 87331154 • HolyFamily@archkl.org